**2026 ஏப்ரல் மாதம் 08– ஆம் தேதி புதன்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 271/2021**

O.S. No.: 271/2021 – பீட்டர் குழந்தை த/பெ.சவரிமுத்து PW2 08.04.2026

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் கல்லூரியில் தஞ்சை, வேளாங்கண்ணி கல்லூரியில் பேராசிரியராக வேலை செய்து வருகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.B.A., வரை படித்துள்ளேன். கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக எனது தாயார் செய்த கடனுறுதிச்சீட்டை நான் பூர்த்தி செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மொத்தம் எத்தனை கடனுறுதிச்சீட்டுக்களை நான் பூர்த்தி செய்தேன் என்றால் இரண்டு ஆகும். எந்த ஆவணத்தை கடனுறுதிச்சீட்டுடன் எனது தாயார் பெற்றார் என்றால் ஜான்சிராணியின் தந்தையின் பெயரில் உள்ள வீட்டின் அசல் பத்திரம் ஆகும். மேற்படி விபரத்தை நான் எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2. நிரூபணவாக்குமூலத்தில் எனது வழக்கறிஞர் தயார் செய்ததில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் படித்து பார்த்தப்பின் கையொப்பம் செய்தேன். நான் எத்தனை ஆண்டுகளாக வேலை செய்து வருகிறேன் என்றால் 2019ம் ஆண்டு முதல் வேலை செய்து வருகிறேன். எனது அம்மா எத்தனை வருடங்களாக கொடுக்கல் வாங்கல் தொழில் செய்து வருகிறார் என்றால் தொழில் செய்யவில்லை, பிரதிவாதி உறவினர் என்ற அடிப்படையில் அவர் வீடு கட்டுவதற்காக உதவிற்காக பணம் கொடுத்தார். பிரதிவாதியை தவிர எனது அம்மா வேறு யாரிடமும் கொடுக்கல் வாங்கல் செய்யவில்லை என்றால் எனது அம்மாவிடம் தான் கேட்க வேண்டும்.

3. எனது தந்தையோ, தாயாரோ கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக இந்நீதிமன்றத்திலோ அல்லது வேறு நீதிமன்றத்திலோ வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் எனது தந்தை வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அ.வ.எண்.256/2021 வழக்கை வேளாங்கண்ணி என்பவர் மீது எனது தந்தை தாக்கல் செய்துள்ளார் என்றால் வேளாங்கண்ணி மீது வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும், வழக்கு எண் எனக்கு தெரியாது. உத்தமபாளையம் சார்பு நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதியின் தந்தை மீது எனது தந்தை வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும், வழக்கு எண் எனக்கு தெரியாது.

4. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1ம் பிரதிவாதி வழக்குத் தொகையை திருப்பி செலுத்திவிட்டதாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனது தாயார் சொல்லி எனக்கு தெரியும். தேவாரம் காவல்நிலையத்தில் எனது தந்தை, தாயார் பிரதிவாதிகளுடன் சமரசம் பேசிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் சமரசம் பேச சென்றார்கள், புகார் உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தை அணுகுமாறு காவலர்கள் அறிவுறுத்தியதாக எனது தாயார் சொல்லி எனக்கு தெரியும். கடனுறுதிச்சீட்டை நான் பூர்த்தி செய்த போது என்ன நிற மையில் எழுதினேன் என்றால் கருப்பு நிற மையினால் எழுதினேன்.

5. பணம் ரூ.1000/- நோட்டுக்களா அல்லது ரூ.2000/- ரூபாய் நோட்டுக்களா என்றால் ரூ.100/- நோட்டுக்கள் ஆகும். பிரதிவாதிகள் என்ன தொழில் செய்து வருகிறார்கள் என்றால் 2வது பிரதிவாதி ஆழ்துளையிடும் கிணறு தொழில் செய்து வருகிறார், 1வது பிரதிவாதி வீட்டுடன் மளிகை கடை வைத்துள்ளார். நான் கடனுறுதிச்சீட்டுக்களை எத்தனை நபர்களுக்கு பூர்த்தி செய்துள்ளேன் என்றால் இவ்வழக்கு கடனுறுதிச்சீட்டிற்கு மட்டும் பூர்த்தி செய்துள்ளேன். பெரிய தொகை என்பதால் பிரதிவாதிகளிடம் காசோலை ஏன் எழுதி வாங்கவில்லை என்றால் உறவுக்காரர் என்பதால் கேட்கவில்லை. பொதுவாக ரூ.2, 3 லட்சத்திற்கு மேல் பரிவர்த்தனை செய்யும்போது அந்த தொகையை வங்கி மூலம் பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் ரொக்கமாக கொடுத்தோம். 2020 காலக்கட்டங்களில் கொரோனா காலக்கட்டம் என்பதால் பணம் கொடுக்கவில்லை என்றால் 2019 கொரோனா காலம் அல்ல.

6. நம்பிக்கையின் அடிப்படையில் பணம் கொடுத்ததால் ஏன் கடனுறுதிச்சீட்டு மற்றும் அசல் ஆவணங்களை பெற்றோம் என்றால் முழுமையாக நம்பவில்லை. ரூ.3 லட்சத்திற்கு மேல் பண வர்த்தனை செய்தால் வருமான வரி கட்ட வேண்டும் கட்ட வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான், பிரதிவாதிகளுக்கு கொடுத்த பணம் சிறுக சிறுக விவசாயத்திலிருந்து வந்த வருமானம் மூலம் கொடுத்த பணமாகும். மேற்படி விபரத்தை நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பணத்தை எங்கு வைத்திருந்தோம் என்றால் வீட்டில் வைத்திருந்தோம், நானும் கொஞ்சம் பணம் வைத்திருந்தேன்.

7. எனது தாயார் கொடுத்த பணத்திற்கு பொய்யாக கடனுறுதிச்சீட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. எனது தாயார் மற்றும் தந்தையின் பேரில் உத்தமபாளையம் நீதிமன்றத்தில் கொடுக்கல் வாங்கல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் எனது தாயாரின் பேரில் இவ்வழக்கு மட்டும் தான், தந்தையின் இரண்டு வழக்குகள் உள்ளது, எனக்கு கொடுக்கல் வாங்கல் விபரம் தெரியாது. வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதிகளுடைய கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல, எனது கண்முன்னால் கையொப்பம் செய்தார்கள்.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 08.04.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.08 16:21:53 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
08.04.2026.